# தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy)
## சென்னை – 600 025.

**ஆசிரியர் பட்டயப் பயிற்சி (ஓராண்டு)**

## தாள் –3 தமிழில் படைப்பாற்றல் திறன்
**முதல் பருவம்**

| |
|---|
| **நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)** |

**ஜீலை–ஆகஸ்ட் 2025**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3 இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. படைப்பு என்பது யாது?
2. ஆக்கத்திறன் பொருள் கூறுக.
3. 'உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று கூறியவர்?
4. இலக்கியம் என்பது யாது?
5. "உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
   உருவெடுப்பது கவிதை" என்ற கவிதைப் பொருள் கூறியவர்.
6. சிறுகதை என்றால் அளவில் எவ்வாறு இருக்க வேண்டும்.
7. கற்றல் என்பது யாது?
8. கற்பனை ஏன் படைப்பாற்றலுக்குத் தேவைப்படுகிறது?
9. முழக்கத்தொடர் என்பது யாது?
10. "பணம் பத்தும் செய்யும்" – என்று குறிப்பிடுவது எது?
11. சொற்பொழிவு முறை என்பது எம்முறையினையே குறிக்கும்
12. இலக்கியம் – பொருள் கூறுக.

13. "ஆத்திசூடி" என்ற நூலை எழுதியவர்?
14. முழு வீச்சாகக் குழந்தைகளுக்காக மட்டுமே கவிதை எழுதியவர் யார்?
15. சிங்கப்பூரில் புதுக்கவிதையின் முன்னோடியாகத் திகழ்பவர் யார்?

**பிரிவு – 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

16. கில்பர்ட்டின் ஆக்கத்திறன் கூறுகள் யாவை?
17. மொழிப்பாடத்தில் படைப்பாற்றலின் இன்றியமையாமையைக் குறிப்பிடுக.
18. கருத்துப்படங்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
19. தமிழ் இலக்கியம் பற்றி எடுத்துக்காட்டுடன் தருக.
20. மரபிலக்கியப் படைப்புகள் குறித்துப் பட்டியல் இடுக.
21. உலக அளவில் படைப்பாற்றலை வளர்க்க நீவிர் மேற்கொள்ளும் பணிகள் யாவை?
22. இலங்கையில் எழுதப்படும் சிறுகதைகள் பற்றி குறிப்பிடுக.
23. நயம் பற்றி குறிப்பிடுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

24. (அ) மொழி சார்ந்த படைப்புகளுக்கும் மொழி சாராத பிற படைப்புகளுக்கும் இடையேயுள்ள வேற்றுமை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுகதை எழுத மேற்கொள்ளும் பயிற்சிகள் பற்றி விரிவாக விளக்குக.

25. (அ) இந்தியாவில் இதழியலின் தொடக்கக் காலம் முதல் தற்போது வரை உள்ள இதழ்கள் குறிதடது விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) கடித வகைகள் யாவை? ஏதேனும் ஒரு கடிதம் ஒன்றினை எழுதுக.

26. (அ) குழந்தை இலக்கியம் என்றால் என்ன? தமிழக குழந்தை இலக்கியங்களுக்கும் அயலகக் குழந்தை இலக்கியங்களுக்கும் இடையே படைப்புகளைக்குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) படைப்பாற்றலை வளர்க்க இணையத்தளம் எவ்வாறு உறுதுணைப் புரிகின்றன என்பதை நிறுவுக.

***